திருக்கோவில் பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திருக்கோவில் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) நிலையான வைப்புக்கள் மீதான மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 206,640 கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியினர் கடன் மீதி ரூபா 3,896,375 ஆகக் காணப்பட்டபோதிலும், 2016 சனவரி 01 இல் இம்மீதி ரூபா 3,644,985 ஆக முன்கொண்டு வரப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் இக்கடன் மீதி ரூபா 251,390 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 92,065 பெறுமதியான தளபாடங்கள் மீண்டுவரும் செலவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) பேரேட்டின்படி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீளளிக்கப்படக்கூடிய நானாவித வைப்பு மீதி ரூபா 2,085,980 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றில் ரூபா 2,206,904 ஆகக் காட்டப்பட்டதனால் மீளளிக்கப்படக்கூடிய நானாவித வைப்பு மீதி ரூபா 120,924 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசிறை நிலுவை ரூபா 2,412,119 தொகையில் ரூபா 854,868 தொகை 12 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 126,013,965 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 2,425,198 | |
| தளபாடங்கள் பொருத்துக்கள் | 1,468,599 | |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை ஜனநாயகக் சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி. 371 | எந்நோக்கத்திற்காக முற்பணங்கள் வழங்கப்பட்டதோ அந்நோக்கம் பூர்த்திசெய்யப்பட்டதும் உடனடியாக தீர்த்து வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 284,800 பெறுமதியான 12 முற்பணங்கள் 30 நாட்கள் முதல் 360 நாட்கள் வரையான கால வீச்சிலான தாமதத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சபை தவிசாளர், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,447,820 தொகையான 4 முற்பணங்களை 04 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 571 | 02 தொடக்கம் 09 ஆண்டுகள் வரையான காலத்தை விஞ்சியுள்ள ரூபா 6,095,873 பெறுமதியான 246 மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (ஆ) IAI/2002/02 அம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 06 கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,800,750

ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 5,810,562 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 990,188 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 439 வர்த்தக நிலையங்கள் மற்றும் 8,972 வீடுகள் மீது வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 4,700,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

2.2.2 இறைச்சிக் கடை, மீன் சந்தை மற்றும் பொதுச் சந்தை குத்தகை

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறைச்சிக் கடை, மீன் சந்தை மற்றும் பொதுச் சந்தை குத்தகை நிலுவை ரூபா 1,026,715 தொகையில் ரூபா 769,335 நிலுவைத் தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

2.2.3 வாடகை வருமானம்

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வாடகை வருமான நிலுவை ரூபா 1,360,227 தொகையில் ரூபா 734,585 நிலுவைத் தொகை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

2.2.4 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுக்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளைச் சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 14 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிட முடியாததனால் சபை வருடாந்தம் ரூபா 60,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 7 வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்தியமைத்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்ட சபைக்கு சொந்தமான 03 உழவு இயந்திரம், 03 கல் அமுக்கி இயந்திரம் மற்றும் பவுசர் என்பவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கு 03 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை எடுத்திருக்காமையால் அவை பயன்படுத்தமுடியாத நிலைக்கு மாறியுள்ளது.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

3.2.1 பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு வீதியினை புனரமைத்தல் வேலை ரூபா 441,915 செலவில் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டதாக ஆவணங்களைத் தயாரித்து தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்பட்டு 2016 திசெம்பர் 31 இல் அதற்கான நிதி பெறப்பட்டிருந்த போதிலும், குறித்த வேலையானது இன்று வரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இவ் வேலைத்திட்டத்தின் கீழ் பேருந்து நிறுத்துமிட நிர்மாண வேலையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியினை பெறாமல் ரூபா 167,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு ரூபா 76,165 செலவு செய்யப்பட்ட பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டமையினால் இக்குறித்த வேலையானது நிறுத்திவைக்கப்பட்டமையால் இதற்காக செலவிடப்பட்ட தொகையானது விளைவற்ற செலவாக மாறியுள்ளது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்து பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுதல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |